மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24ஆம் நாள் வியாழக் கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.எஸ்.அருணா, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 202/2015 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | .. நதியா | வயது | .. 33 |
| க/பெ. | .. முருகன் | சாதி | .. |

24.2.2022 - வா.சா.1 குறக்கு விசாரணை.

எனக்கு 33 வயதாகிறது. நான் வெள்ளூரில் வசித்து வருகிறேன். நான் தற்போது களம்பூரில் அம்மா வீட்டில் வசித்து வருகிறேன். 3ம் வாதி நளினி என் தங்கை. 1ம் வாதி என்னுடைய தாயார். பிரதிவாதி என்னுடைய பெரியப்பா. வழக்கு சொத்து சம்பந்தமான விவரம் என்னை விட என் அம்மாவிற்கு நன்றாகத் தெரியும் என்றால் சரிதான். என் அம்மாவை வழக்கில் சாட்சியாக போடாததற்கு காரணம் சொல்ல முடியுமா என்றால் அவருக்கு சரியாக பேச வராது என்பதால் அவரை சாட்சியாக அழைக்கவில்லை. எனதுஅப்பா எப்போது இறந்தார் என்றால் 1983ல் இறந்தார். சாட்சி தற்போது மாற்றி 1992ல் இறந்தார் என்று சொல்கிறார். சுமார் 30 வருடங்களுக்கு முன்பாக இறந்து இருக்கலாம். எனது அப்பாவின் அம்மா பெயர் வெள்ளச்சி அம்மாள். என் பாட்டியை நான் பார்த்ததில்லை. என் தாத்தா பெயர் கட்டைய கவுண்டர். என் பாட்டி இறப்பதற்கு முன்பாகவே எனது தாத்தா இறந்து விட்டார். என் அம்மாவிற்கு எப்போது திருமணம் ஆனது என்பது எனக்குத் தெரியாது. இந்த வழக்கு எதற்காக போட்டுள்ளோம் என்றால் எங்களுக்கு உரிமையான சொத்து என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். சொத்தை எனது பெரியப்பா தான் அனுபவித்து வருகிறார் என்றால் நாங்களும் பயிர் வைத்து

வருகிறோம். வழக்கு சொத்திற்கு ஆதியில் என்ன சர்வே எண் இருந்தது என்று எனக்குத் தெரியுமா என்றால் சர்வே எண்.51/3 விஸ்தீரணம் 2.56 ஏக்கர். அந்த சொத்தை யார் கிரையம் வாங்கினார்கள் என்பது எனக்குத் தெரியாது என்றால் எனது பாட்டி கிரையம் வாங்கினார். யார் எனக்கு அவ்வாறு சொல்லியது என்றால் எனது அம்மா சொன்னார்கள். பத்திரம் எனது பாட்டியின் பெயரில் உள்ளதால் அவர் வாங்கியதாக சொல்கிறோம் என்றால் சரிதான். எனது பாட்டி வழக்கு சொத்தை வாங்கவில்லை என்றாலும் எனது பெரியப்பா தான் சொத்தை வாங்கி எனது பாட்டி பெயரில் கிரையப்பத்திரம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எனது பாட்டி தான் சொத்தை வாங்கினார். வாங்கி அதனை அவரது மகன்கள் இருவர் பெயரிலும் எழுதி வைத்தார். எனது பாட்டி அவரது மகன்களுக்கு சொத்தை எழுதி வைத்தற்கு சான்றாக ஆவணம் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால்தாக்கல் செய்திருக்கிறேன். எனது பாட்டியை நான் பார்த்தில்லை என்றாலும் வழக்கு சொத்து பிரதிவாதி தான் வாங்கினார் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்தானது எனது தந்தையின் உழைப்பும் சேர்த்து தான் வாங்கப்பட்டது. அவ்வாறு யார் என்னிடம் கூறினார் என்றால் எனது தந்தையும், தாயும் கூறினார்கள். எனது தந்தை இறக்கும்போது எனக்கு 4 வயது இருக்கும். எனது தந்தையின் உழைப்பையும் சேர்த்து தான் சொத்தை வாங்கியதாக தாவாவில் கூறியிருக்கிறேனா என்றால் கூறியிருக்கிறேன். எனது தந்தை எந்த வேலைக்கு செல்வதில்லை என்றாலும் ஊதாரித்தனமாக ஊரை சுற்றிக்கொண்டிருந்தார் என்றாலும், ஏனது தந்தைக்கும் பிரதிவாதி தான் திருமணம் செய்து வைத்தார் என்றாலும் சரியல்ல. நானும் எனது தங்கையும் சிறுவயதாக இருக்கும்போதே எனது தந்தை இறந்து விட்டதால் பிரதிவாதி தான் எங்களை பராமரித்து வந்து எங்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. இது வரைக்கும் எங்களுக்காக அவர் எதுவும் செய்ததில்லை. நானும் எனது தங்கையும் எங்களது கணவரின் பேச்சை கேட்டு சொத்தின் மீது ஆசைப்பட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்குண்டான சொத்தை நாங்கள் கேட்கிறோம். தாவா சொத்தை பிரதிவாதி ஒரு கிருஷ்ண உடையார் என்பவரிடமிருந்து 4.3.1977ல் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. வெள்ளச்சி அம்மாள்

தான் கிரையம் வாங்கினார். கிரையம் வாங்கிய தேதி முதல் இன்றுவரை பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் அனுபவித்து வருகிறோம். நாங்கள் அனுபவித்து வருவதற்கு சான்றாக ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் தாக்கல் செய்திருக்கிறோம். நாங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக எங்களால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. பிரதிவாதி எழுதப்படிக்கத் தெரியாதவர் என்பதால் வருவாய்த்துறை ஆவணங்களை அவர்களுக்கு தெரியாமல் எங்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களுக்குண்டான சொத்தை தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. கிரையம் பெறும்போது கிரையத்தொகை முழுவதும் பிரதிவாதியல் செலுத்த முடியாததால் அதே சொத்தை ரூ.2000/-த்திற்கு கிரையம் கொடுத்த நபரான கிருஷ்ண உடையார் என்பவரிடமே பிரதிவாதி அடமானம் போட்ட விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. கிரையம் பெற்ற அதே தேதியில் அடமானம் போட்ட விவரத்தை எனது பெற்றோர் எனக்கு கூறவில்லை என்றால் சரிதான். அந்த அடமான தொகையில் ரூ.1300/-ஐ 4.5.1975ல் திரும்ப கொடுத்து செல் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அதன் பிறகு 22.5.1982ல் ரூ.1000/- கொடுத்து பிரதிவாதி செல் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி அடமானத்தை பைசல் செய்த விவரம் எனக்குத் தெரியும் என்றாலும் தெரிந்தே நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அடமானம் சம்பந்தமாக பிரதிவாதி அவரது மனைவியின் நகையை வைத்து தான்அடமானம் பத்திரம் எழுதினார் என்றாலும் அதனை எனது பெற்றோர்கள் எனக்கு சொல்லியிருக்கிறார்கள் என்றாலும் அதனை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சொத்தை கிரையம் பெறும்போது எனது தந்தையே சிறுவனாக இருந்ததால் அவருடை உழைப்பையும் சேர்த்து சொத்தை வாங்கியதாக கூறுவது தவறு என்றாலும் பிரதிவாதியின் உழைப்பினால் மட்டுமே சொத்து கிரையம் பெறப்பட்டது என்றாலும் சரியல்ல. சொத்தை கிரையம் பெறும்போது புஞ்சை நிலமாக இருந்தது என்றாலும்

அதில் கிணறு வெட்டி பிரதிவாதி தான் பயிர் செய்து வருகிறார் என்றாலும் கிணறு வெட்டியதற்குண்டான பணத்தை நாங்கள் அவருக்கு கொடுத்து விட்டோம். எவ்வளவு பணம் எப்போது பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை சொல்லியிருக்கிறோமா என்றால் அந்த ஆவணத்தில் சொல்லியிருக்கிறோம். நான் கூறிய விவரங்கள் எனதுதாவாவில் கூறப்படவில்லை என்றாலும் அதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சொத்து சம்பந்தமாக வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டபோது யார் யார் இருந்தார்கள், ஏப்போது ஏற்பட்டது என்ற விவரத்தை சொல்லியிருக்கிறோமா என்றால் சொல்லியிருக்கிறோம். நான் கூறியிருப்பது போல் பஞ்சயாத்தோ, மூாகப்பிரிவினையோ நடக்கவில்லை என்றால் சரியல்ல. 25.5.2012 அன்று பிரதிவாதி எங்களதுஅனுபவத்தை தடை செய்ததாக கூறியிருக்கிறேன். அது சம்பந்தமாக புகார் ஏதேனும் கொடுத்திருக்கிறேனா என்றால் களம்பூர் காவல்நிலையம், ஆரணி டிஎஸ்பி அலுவலகம், மற்றும் திருவண்ணாமலை எஸ்.பி. அலுவலகத்திலும் புகார் கொடுத்திருக்கிறோம். அது சம்பந்தமாக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கில் உள்ள சங்கதிகள் எல்லாம் வழக்கிற்காக கூறப்பட்டவையே தவிர உண்மையான சங்கதிகள் அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி வயதானவர் என்பதால் சொத்தை அவரிடமிருந்து பெறுவதற்காக அவரது அனுபவத்தை தடை செய்வதற்காக நாங்கள் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

(Sd)/-D.Ravi,
District Munsif,
Polur.